விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka




ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 15 திங்கட்கிழமை (29.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 41

அரசுடன் இணைந்து கொண்ட ஐ.தே.க.எம்.பிக்களில் இருவரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சர்களாக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தபோது...

# ஐ.தே.க.உறுப்பினர்கள் அடங்கிய புதிய அமைச்சரவை பதவியேற்பு

## முக்கிய அமைச்சுப் பதவிகள் கை மாறின

(கொழும்பு)

அரசுடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய 52 அமைச்சர்கள் நேற்று பதவி யேற்றனர். இப் பதவியேற்பு வைபவம் நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில்நடைபெற்றது.

புதிய அமைச்சரவையில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு முக்கிய அமைச்சுக்கள் வழுங்கப்பட்டுள்ளன. முன்னர் முக்கிய அமைச்சுக்களில் இருந்தவர்களின் பதவிகள் கை மாறி

## அரசுடன் செய்த ஒப்பந்தம் நேற்றுடன் முடிந்து விட்டது

### ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அரசு அமைச்சுப் பதவிகளை வழங்கி தனது கட்சி உறுப்பினர்களை கவனத்திற்கு ஈர்த்துள்ளமையால் இனப்பிரச்சினை தீர்வு உள்ளிட்ட ஐந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் பொது இணக்கப்பாடுகளின் அடிப்படையில் செயற்படுவதாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முற்றாக மீறப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுடன் முடிபடைந்துள்ளது. இனிமேல் நடைமுறையில் இருக்காது. அரசுக்கு ஆதரவளிப்போம். அதற்கு எதிராக நாங்கள் வேலை செய்ய மாட்டோம். நாம் வழங்கிய உறுதி மொழியை அரசு துஷ்பிரயோகம் செய்து விட்டது. மிக விரைவில் இந்த அரசை

புதிய அமைச்சரவையில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு முக்கிய அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்னர் முக்கிய அமைச்சுக்களில் இருந்தவர்களின் பதவிகள் கை மாறியுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளிட்ட ஐந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் பொது இணக்கப்பாடுகளின் அடிப்படையில் செயற்படுவதாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முற்றாக மீறப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனநாயக்க நேற்று

நடைமுறையில் இருக்காது. அரசுக்கு ஆதரவளிப்போம். அதற்கு எதிராக நாங்கள் வேலை செய்ய மாட்டோம். நாம் வழங்கிய உறுதி மொழியை அரசு துஷ்பிரயோகம் செய்து விட்டது. மிக விரைவில் இந்த அரசை நாம் பதவியில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் மக்களுக்கு தனி மாவட்டம் ?

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென தனி மாவட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைவதற்கு விதிக்கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகளில் இதுவும் ஒன்றெனத் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம்களுக்கு தனியான மாவட்டம் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிசையில் 18 பேர் கைது

(கொழும்பு)

கல்கிசைப் பகுதியில் சனி இரவு மற்றும் நேற்று அதிகாலை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது 18 பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களில் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழர்கள் பெரும்பான்மை யாவோர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் உரிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் இருந்தபோதும் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட ஒரே காரணத்திற்காக பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இவர்கள் இங்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## நேபாளத்திலிருந்து ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேபாளத்திற்கான மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று இந்தியாவிற்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் புதுடில்லி நகரில் நடைபெறவுள்ள காங்கிரஸ் கட்சியின் சர்வதேச மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ள எதிர்பார்ப்பதாக கட்சியின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# கட்சி எம்.பிக்கள் அரசில் இணைந்தமை எவ்வித கவலையையும் ஏற்படுத்தாது!

### ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைவது குறித்து ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கவலை கொள்ளவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் மிகப்பெரும் அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என ரணில் விக்கிரமசிங்க கருதுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மகிந்த ராஜபக்ஷ (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த சீனா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். நேற்று நடைபெற்ற அமைச்சரவை மறு சீரமைப்பை அடுத்து மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளவுள்ள முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் 26 ஆம் திகதி சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ள மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான (04 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

| | |
|---|---|
| 01. ரட்ணசிறி விக்கிரமநாயக்க | உள்ளூராட்சி மற்றும் உள் விவகார அமைச்சர் |
| 02.அநுரா பண்டார நாயக்க | தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் |
| 03. டி.எம்.ஜெயரட்ண | தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் |
| 04.நிமால் சிறிபால டி சில்வா | சுகாதாரம், போசாக்கு மற்றும் நலன்புரி அமைச்சர். |
| 05. மங்கள சமரவீர | துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சர். |
| 06.ஏ.எச்.எம்.பௌசி | பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் |
| 07.ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் |
| 08.மைத்திரிபால சிறிசேன | விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் |
| 09.சுசில் பிரேமஜெயந்த | கல்வி அமைச்சர் |
| 10.கரு ஜெயசூர்ய | பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் |
| 11. ஆறுமுகம் தொண்டமான் | இளைஞர் விவகாரங்கள் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் |
| 12.ரவூப் ஹக்கீம் | தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர். |
| 13.டினேஸ் குணவர்த்தன | நகர அபிவிருத்தி அமைச்சர் |
| 14.டக்ளஸ் தேவானந்தா | சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் |
| 15.பேரியல் அஷ்ரப் | வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சர் |
| 16. பெ.சந்திரசேகரன் | சமூக அபிவிருத்தி மற்றும் சமூக ஏற்றத் தாழ்வு அமைச்சர் |
| 17.ஏ.எல்.எம்.அதாவுலா | நீர் விநியோக அமைச்சர் |
| 18. பேராசிரியர் திஸ்ஸ விதாரண | விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் |
| 19.டி.டிபிள்யு.குணசேகர | அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் |
| 20.அப்துல் றிசாட் பதியுதீன் | மீள்குடியேற்ற அமைச்சர் |
| 21.பி.தயாரட்ண | திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சர் |
| 22.ஆர்.எம்.தர்மதாஸ பண்டார | மேலதிக பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் |
| 23.எம்.எச்.மொகமட் | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் |
| 24.பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் | ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் |
| 25.ஜோன் செனவிரட்ண | மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் |
| 26.திருமதி சுமேத டி ஜெயசேன | குழந்தைகள்அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் |
| 27.சரத் அமுனுகம | விவசாய அபிவிருத்தி அமைச்சர் |
| 28.மில்ரோய் பெர்னாண்டோ | பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சர் |
| 29.ஜீவன் குமாரதுங்க | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் |
| 30.பவித்திரா வன்னியாராட்சி | இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் |
| 31.அநுர பிரியதர்ஷன யாப்பா | தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் |
| 32.திஸ்ஸ ஹரல்லியட்ட | சுதேச வைத்தியத்துறை அமைச்சர் |
| 33.அதாவுல்ல செனவிரட்ண | தொழில்வாய்ப்பு மனித வளங்கள் அமைச்சர் |
| 34.காமினி லொக்குகே | விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அமைச்சர் |
| 35.பந்துல குணவர்த்தன | வர்த்தகம் ,நுகர்வோர் ,கூட்டுறவு மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் |
| 36.மகிந்த சமரசிங்க | மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் |
| 37.ராஜித சேனரட்ண | நிர்மாணம் மற்றும் பொருளியல் துறை அமைச்சர் |
| 38.மகிந்த விஜயசேகர | விசேட உற்பத்திக்கள் அமைச்சர் |
| 39.மிலிந்த மொறகொட | சுற்றுலாத்துறை அமைச்சர் |
| 40.ஹெகலிய ரம்புக்வெல | வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் |
| 41.பியசேன கமகே | தொழிற்சங்க மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் |
| 42.ஆர்.எம்.ஜீ.பி. நவீன் | கிராமிய கைத்தொழில் மற்றும் சுய தொழில் வாய்ப்பு அமைச்சர் |
| 43.ஜெனக பண்டார தென்னக்கோன் | மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் |
| 44.பீரிஸ் பெரேரா | மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் |
| 45.ஆர்.எம்.சி.பி.ரட்ணாநாயக்க | கால்நடை அபிவிருத்தி அமைச்சர் |
| 46.றோகித போஹல்லாகம | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் |
| 47.மகிந்த யாப்பா அபயவர்த்தன | கலாசார அலுவல்கள் அமைச்சர் |
| 48.பேராசிரியர் திஸ்ஸ வம்பேல | உயர் கல்வி அமைச்சர் |
| 49.சமல் ராஜபக்ஷ | நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் |
| 50.குமார வெல்கம | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் |
| 51.டல்லஸ் அழகப்பெருமா | போக்குவரத்து அமைச்சர் |
| 52.அமரசிறி தொடங்கொட | நீதி மறுசீரமைப்பு அமைச்சர். (ச-5) |

# நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறியோருக்கு

(யாழ்ப்பாணம்)

மருந்து வழங்குநர், மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர், பௌதிகவியலாளர், எக்ஸ்ரே ஒளிப்பதிவாளர் , தொழில்சார் குணப்படுத்துநர்கள் போன்ற பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கத் தவறியவர்களை உடனடியாக நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். அழைக்கப்பட்டோர் விபரம்,

எஸ்.வித்தியா (மந்துவில் மேற்கு, கொடிகாமம்), ஏ.நெவின் (27, மார்ட்டின் லேன், யாழ்ப்பாணம்), எஸ்.சாரங்கன்(காக்கைவளவு, இடைக்காடு, அச்சுவேலி), எஸ்.சதீசன்(சரசாலை வடக்கு, சாவகச்சேரி), வி.கதிர்ச்செல்வன் (கெற்பலி, மிருசுவில்), எஸ்.பிரசன்னா (குருசுமதவடி, மானிப்பாய் றோட், ஆனைக்கோட்டை), எஸ்.நிர்மலன் (6/4, தலையாழி, கொக்குவில்), ரி.கதிர்காமத்தம்பி (8-வது மைல்கல், துர்க்காபுரம், தெல்லிப்பழை) (ச)

# அதிகளவு அமைச்சர்கள் நியமனம் பொருளாதாரத்துக்குச் சுமை

## ஜே.வி.பி.கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் நேற்று மேற்கொண்ட அமைச்சரவை மாற்றமானது 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையினை மீறும் நடவடிக்கை என ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சரவையில் அதிகமான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமையானது இலங்கை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதாரச் சுமையாகும் என அக்கட்சியின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் இணைந்துள்ளவர்கள் வரப்பிரசாதங்களை எதிர்பார்த்து இணைந்துள்ளதாகவும் இவர்களில் அதிகமானோர் 2001 ஆம் ஆண்டில் அரசாங்கத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் எனவும் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ச-3)

# வடக்கு நோக்கி புலிகள் நகர்வு

## கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வாகரைப் பிரதேசத்தை கைவிட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு நோக்கி இடம் பெயர்வதாக இலங்கைப்போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

புலிகளிடமிருந்து வாகரை வீழ்ச்சியுற்ற பின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் கிழக்குப் பிராந்தியங்களைத் தக்க வைத்துக் கொள்ளலாமல், ஆனால் அப் பிரதேசத்தில் நீடித்திருப்பதற்குத் தீர்மானித்துள்ளார்கள் என்பது உண்மை போல் தெரிகின்றது என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

திருகோணமலை,குச்சவெளி பகுதிகளுக்கிடைப்பட்ட காடுகளை நோக்கி அவர்கள் நகருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகரை வீழ்ச்சியின் பின் கண்காணிப்புக் குழு அங்கு குழுவொன்றை அனுப்பியது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காக அக் குழு வாகரைக்குள் செல்ல முடியவில்லை.

எனினும் இப் பிராந்தியத்தில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 23-வது படைப்பிரிவின் தளபதியை அக்குழு சந்தித்தது. வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் வன்முறைகள் அதிகரித்திருந்தன.

மட்டக்களப்பில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 8 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# இராணுவத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த திருடர்கள் முயற்சி

## இராணுவம் தெரிவிப்பு

(பலாலி)

சிங்கள மொழியில் சரளமாகக் கதைத்துப் பாதுகாப்புத் தரப்பினரே கொள்ளைகளில் ஈடுபடுவதாக மக்களுக்கு உணர்த்தக் கொள்ளையர்கள் முற்படுவது தெரியவந்துள்ளதாக பலாலி படைத் தலைமை அறிவித்துள்ளது.

இதுபோன்று இன்னும் பல குழுக்கள் இருப்பதாகவும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் கொழும்புத்துறை இலந்தைப் பிள்ளையார் கோவில் பூசகரின் வீட்டில் கொள்ளையிட முற்பட்ட திருடர்கள் குழுவொன்றை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

ஆறு பேர் அடங்கிய இந்தக் குழுவினர் வீட்டிற்குள் நுழைந்து பூசகரின் தந்தைக்கு விளையாட்டுக் கைத் துப்பாக்கியொன்றைக் காட்டிப் பணம், நகை போன்றவற்றைக் கொள்ளையிட முற்பட்டுள்ளனர்.

அவ்வேளையில் அவ்விடத்திற்கு வந்துள்ள இராணுவத்தினர் திருடர்கள் இருவரைப் பிடித்துள்ளதுடன் தப்பிச் சென்ற ஏனையவர்களையும் கைது செய்வதற்காக அப் பிரதேசத்தை சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டு மேலும் மூவரைக் கைது செய்துள்ளனர் என அவர்களின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சு.கவுக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பு சந்திரிகாவிடம்



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் வழங்கப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர் பதவியை வகித்து வருகின்றார்.

இப் பதவியின் மூலம் கட்சியின் பொருட்டு தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் என்ன என்பது குறித்து தனக்கு விளக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறி சேனவிற்கு கடிதம் ஒன்றினை அண்மையில் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் கலந்துரையாடியதையடுத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு போசகர் பதவியையும் கட்சிக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பையும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பொறுப்புக்கள் விரைவில் கட்சியினால் வழங்கப்படும் எனவும் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது. (ச-5)

# மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்று முன்தினம் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சொந்த இடமாகவும் மல்லாகம் ஐயனார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குட்டி தேவபாலன் (வயது-32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரண விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

மனிதர்கள் இன்னும் பண்பாடடையவில்லை. ஓநாய்க் கூட்டங்களின் உணர்ச்சி இன்னும் அவர்களிடம் குடி கொண்டிருக்கின்றது.

-பிராய்டு

# வலம்புரி

## பேரவலத்தை சந்திக்கப் போகும் யாழ்.குடாநாட்டு மக்கள்

யாழ்.குடாநாட்டு மக்களின் உறக்கமற்ற வாழ்வுக்கு எப்போதுதான் விடிவு கிடைக்கப் போகின்றது. இந்த ஏக்கத்தின் நீடிப்பு பல வருடங்களாகிவிட்டன.

உணவுப் பஞ்சம், ஆட்கடத்தல், காணாமல் போதல், சுட்டுக் கொல்லுதல் என்ற பட்டியலுடன் இப்போது களவும், கொள்ளையும் சேர்ந்துவிட்டன.

உறங்கவே முடியாதென்றளவில் யாழ்.நிலைமை படுபயங்கரமாகிப் போயிற்று. ஊரடங்கு வேளையில் நடக்கும் மனித வேட்டையால் கதிகலங்கிப் போயுள்ள யாழ்.மக்களுக்கு தற்போது நடைபெறும் 'மெகா' கொள்ளை இருந்த அற்ப உறக்கத்திற்கும் முடிவு கட்டிவிட்டது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாலும் வருகின்றவர்கள் யார்? அவர்கள் சுடுகுழல்கள் வைத்திருக்கின்றவர்களா? என்பது தெரியாததாலும், அவலக் குரல் எழுப்புக்கின்ற போது எவருமே துணைக்குச்செல்ல முடியாதுள்ளது.

இப் பரிதாப நிலை தொடர்வதால் கொள்ளையர்கள் தனி வீடென்றில்லாமல் ஒரு குறிப்பிட்ட தொகுதி வீடுகளில் புகுந்து, உழைத்து வைத்தவைக்கும் இல்லாத உரிமை கொண்டாடுகின்றார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெறும் கொள்ளைகளுக்கான சூத்திரதாரிகள் யார்? அவர்களை வழிப்படுத்துவது யார்? போன்ற கேள்விகளுக்கு அப்பால் படையினரைத் தவிர தமிழர்கள் மட்டும் வாழும் கூடிய யாழ்ப்பாணத்தில் இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க - தவிர்க்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அந்த நடவடிக்கையில் ஒன்று கொள்ளையர்களிடமே அன்பாகக் கேட்பது, யாழ்ப்பாண மக்கள் படும் அவல வாழ்வில் உங்கள் தொழிலை தயவு செய்து விட்டுவிடுங்கள்.உழைத்து வாழ முற்படுங்கள். பிறருக்குத் தீங்கு செய்யாதீர்கள். மனித வாழ்வில் பெறுமானத்தை ஓரளவேனும் உணர்ந்து நடவுங்கள் எனக் கேட்பதாகும்.

இதைத் தவிர ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்துவர்களிடம் ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்தும் போது அந்த நேரத்தில் களவு, கொள்ளை இடம்பெறுகிறது எனில் அதற்கான முமுப் பொறுப்பும் யார்?

ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்படும் நேரத்தில் கொள்ளையர்கள் துணிவுடன் நடமாடுகின்றார்கள் எனில், அதன் ஊக்கிகள் யார்? இந்த வினாக்களை பொதுமக்கள் விநயமாகக் கேட்கின்றார்கள்.

மனிதக் கடத்தல்களும், அவல மரணங்களும், களவும் நிறைந்த மண்ணாக யாழ்ப்பாணம் மாறிவிட்டது. இதன் முடிவு புலம்பெயர்வாகவே இருக்கும். இதுவே கடந்த கால பட்டறிவாகும்.

ஆனால் ஏ-9 பாதையின் அடைப்பும் 'பயண அனுமதி' என்ற புதிய நிபந்தனையும் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்தின் ஒழுங்கீனமும் அதில் நடைபெறக் கூடிய மிகப் பெரிய ஊழல்களும் குடாநாட்டு மக்களின் புலம்பெயர்வுக்குத் தடை போடுகின்றன.

சுருங்கக் கூறின் யாழ்.குடாநாட்டில் எல்லைக் குட்பட்ட சிறைக்குள் அத்தனை துன்ப துயரங்களையும் அனுபவிக்கும் வகையில் திட்டம் தீட்டப் பட்டுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

குடாநாட்டு மக்கள் படும் அவலத்தை சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாத நிலையில்-குடாநாட்டுப் பத்திரிகைகளின் ஆயுளை முடிபுறுத்தும் நுட்பத்தில் யாழ்ப்பாண மக்கள் மிகப் பெரும் பேரவலத்திற்குள் சிக்குண்டுள்ளனர்.

அதன் வெளிப்பாடுகள் எதிர்காலத்தில் மிகப் பெரும் மோசமாக இருக்கும் என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிகொள்ளலாம்.

# துறைமுகம் மீதான தாக்குதல் பொருவாதாரத்தைப் பாதிக்கும்

## ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

கொழும்பு துறைமுகப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் முயற்சி இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொருளியல் நிபுணர் கலாநிதி ஹர்சா டீ சில்வா தெரிவித்துள்ளதாவது,

இத் தாக்குதல் கொழும்புத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் காப்புறுதித் தொகையை அதிகரிக்கச் செய்வதுடன் இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

அதாவது கொழும்புத் துறைமுகத்திற்குவரும் கப்பல்களின் காப்புறுதித் தொகை அனைத்துலகத்தில் அதிகரிக்கலாம். கொள்கலன்களை இறக்கும் கப்பல்களின் உரிமையாளர்கள் அதிகளவிலான கட்டணங்களையும் அதிகளவிலான காப்புறுதித் தொகையையும் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

இக் கட்டண உயர்வுகள் இறுதியில் வாடிக்கையாளர்களான பொதுமக்களையே பாதிப்படையச் செய்யும். தற்போதைய காப்புறுதித் தொகை 0.05விகிதம். இது பாதுகாப்பு அச்சுறுத்தல்களைப் பொறுத்து மாற்றமடையலாம் என்றார் அவர்.

இத் தாக்குதலால் உடனடியான பாதிப்புக்கள் ஏற்படாது. ஆனாலும் இலங்கைக்கு வரும் கப்பல்களினதும் கொள்கலன்களினதும் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கலாம் என கடல் வள காப்புறுதித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் துறைமுகத்திற்கு வெளியே இடம்பெற்றதால் கப்பல் போக்குவரத்தை பாதிக்காது. முன்பு நடந்த தாக்குதல்போல் அல்லாமல் இத் தாக்குதலில் கப்பல்கள் சேதமடையவில்லை.

துறைமுகத்திற்கு வெளியில் தரித்து நின்ற வெளிநாட்டுக் கப்பல் ஒன்றிலிருந்த மூன்று கொள்கலன்கள் தாக்குதலில் சேதமடைந்துள்ளன என துமிந்த திஸநாயக்க தெரிவித்தார். (சு-5)

# யாழ்.,நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் விழிப்புக்குழுக்களை அமைக்கப் பணிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுகளில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் இரவு நேரக் கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு விழிப்புக் குழுக்கள் இரு தினங்களுக்குள் நிறுவப்படும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

விழிப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பாக நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் பின்னரே அவர் இவ்வறிவித்தலை விடுத்துள்ளார்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலர் சார்பாக செல்வராஜா உட்பட யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

விழிப்புக் குழுக்களை நிறுவுவதற்கான சில ஆலோசனைகளை யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா வழங்கினார். சிவில் நிர்வாகமும் நீதி நிர்வாகமும் இணைந்து இரவு நேரக் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க முயற்சி எடுத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை தமது பிரிவுகளில் விழிப்புக் குழுக்களைத் தெரிவு செய்து அவர்களின் விபரங்களை இன்று சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் கிராம சேவையாளர்களுக்குப் பணித்துள்ளார். (சு-5)

# ஊரடங்கு வேளையில் நடமாடிய ஏழு பேர் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஊரடங்கு வேளையில் வீதியில் நடமாடிய ஏழு பேரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் கொட்டடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்கள்,

இரட்ணகுமார் நிக்லஸ் எடிசன்(ஸ்ரான்லி வீதி), தவராஜா கஜமுகன் (யாழ்ப்பாணம்) , செல்லத்தம்பி தனபாலு(கொட்டடி), கணேஷ் இந்திரகாந்தன் (கொட்டடி), தவவிநாயகம் பிரதீபன் (நல்லூர்), அரியரட்ணம் சஞ்ஜீத் (கொட்டடி),விஸ்வலிங்கம் இராமச்சந்திரன் (நாவாந்துறை) என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் ஏழு பேரையும் பொலிஸார் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்தனர். கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(சு-5)

# 'சிவதரிசனம்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

எஸ்.சிவானந்தராஜா எழுதிய 'சிவதரி சனம்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசாரத் திணைக்களத்தின் வலிகாமம் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லையாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை சைவப் புலவர் சிவநெறிக் கலாநிதி இ.ஸ்ரீதரனும் நிகழ்த்துவார்.

ஆய்வுரையை பண்டிதர் த.பொன்னம்பலவாணர் நிகழ்த்துவார்.வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணாநந்தசர்மா வழங்குவார். (சு)

# மாவோப் போராளிகளை ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

(கொழும்பு)

நேபாளத்திற்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மாவோப் போராளிகளின் தலைவர் பிரசந்திராவை சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின் போது தான் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு விரும்புவதாக மாவோப் போராளிக் குழுத் தலைவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவுடனும் பேச்சு நடத்தியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# பௌத்த பிக்கு பொலிஸாரால் கைது

(கொழும்பு)

12 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய தாகக் கூறப்படும் 58 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவரை ஹுதரலியத்தப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஹுதரலியத்த வெதென்னகிராம விகாரை ஒன்றின் பௌத்த பிக்கு ஒருவர் தன்னை பாலியல் வல்லுறவு புரிந்ததாக இச் சிறுமி பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பெற்றோர் ஹுதரலிய பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

பொலிஸார் சிறுமியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்ட பின்னர் சிறுமியை வைத்தியபரிசோதனைக்குட்படுத்துமாறு பெற்றோருக்கு ஆலோசனை வழங்கிய பின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரான பௌத்த பிக்குவைக் கைது செய்துள்ளனர். (சு)

# நீரில் மூழ்கி குழந்தை மரணம்

(குன்னாலை)

நீர் நிரப்பியிருந்த வாளியினுள் தவறுதலாக வீழ்ந்த குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இச் சம்பவம் வடமராட்சி மாலு சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தாயார் தனது இரண்டு குழந்தைகளையும் நீராட்டுவதற்காக வாளியில் நீரை நிரப்பிவிட்டு 6 மாதம் நிரம்பிய குழந்தையை குளிப்பாட்டியதாகவும் பின் அக் குழந்தையை வீட்டினுள் விட்டு விட்டு மற்றைய குழந்தையை குளிப்பாட்டவந்தபோது அக் குழந்தை அவ்விடத்தில் இல்லை.

இதனையடுத்து குழந்தையைத் தேடியபோது குழந்தை நீர் நிரப்பிய வாளியினுள் தத்தளித்துக் கொண்டிருந்ததாகவும் இதனையடுத்து குழந்தையை மீட்டு மந்திகை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றபோது சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் இரண்டரை வயதான பிரதீபன் ரம்மியா என்ற குழந்தையே உயிரிழந்ததாகும். (சு-10)

# கல்முனை பிரதேச வளர்ச்சிக்காகவே நான் அரசாங்கத்துடன் இணைந்தேன்

## அமைச்சர் மையோன் முஸ்தபா

சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட கல்முனை பகுதியின் வளர்ச்சிக்காகவே தான் அரசாங்கத்தில் சேர்ந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஆளும் கட்சியில் சேர்ந்து அமைச்சர் பதவி ஏற்றுள்ள மையோன் முஸ்தபா தெரிவித்தார்.

அமைச்சர் பதவிக்காக தான் அரசாங்கத்தில் சேரவில்லை அப்படி பதவிக்காக தான் சேர்வதாக இருந்தால் முன்னரே இன்னும் உயர்ந்த பதவிகள் கொடுப்பதாக ஆளும் கட்சி கூறியபோது சேர்ந்திருப்பேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

அத்தோடு ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தினை தாங்கள் முன்னெடுத்துச்செல்வோம் என்றும் அந்த ஒப்பந்தம் தொடர்ந்து இருக்க வேண்டும். அது நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தான் தங்களுடைய நிலைப்பாடு என்றும் அவர் கூறினார். (ச-5)

## ஐ.தே.க.உறுப்பினர்கள்...

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மாற்றம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டவர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரவையில் புதிதாக இணைந்து கொண்டுள்ளனர்.

அதேவேளையில் , முன்னைய அமைச்சுப் பதவிகள் பலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றது.

இதன்படி 52 உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைச்சரவை நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டது.

இந்த மாற்றங்களின்படி ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக்குழு உறுப்பினர்கள் பலருக்குப் பிரதான அமைச்சர் பதவிகள் பல வழங்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள் அனைவரும் நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம் பெற்ற சிறப்பு வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் முன்னைய பதவிகளிலிருந்து மாற்றப்பட்டிருப்பதால் பெரும் அதிருப்தியடைந்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தியாளர் குழுத்தலைவரும் அக்கட்சியின் முன்னாள் பிரதித் தலைவருமான கரு ஜயசூர்ய உள்நாட்டு அலுவல்கள் பொது நிர்வாகம் அமைச்சராகப் பதவியேற்றிருக்கின்றார்.

சுற்றுலாத்துறை அமைச்சராக மிலிந்த மொறகொடவும், ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சராக பேராசிரியர் ஜீ.எல்.பீரிசும்,வர்த்தக அபிவிருத்தி மற்றும் கூட்டுறவுச் சேவைகள் அமைச்சராக பந்துல குணவர்த்தனவும். நிர்மாணம் மற்றும் பொறியியல்துறை அமைச்சராக டாக்டர் ராஜித சேனாரட்ணவும், சிறப்பு திட்ட மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சராக ஏம்.எச்.முகமத்தும், மேலதிக பெருந்தோட்டத்துறை அமைச்சராக தர்மதாச பண்டரவும் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

இதனைவிட ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசுடன் இணைந்துகொண்ட ஏனைய பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் ,தபால் தொலைத் தொடர்பு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சராக இருந்த அநுரா பண்டாரநாயக்கவும் முன்னைய அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருப்பதால் பெரும் விரக்தியடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மங்கள சமரவீரவுக்கு துறைமுக மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சுப் பொறுப்பே வழங்கப்பட்டிருக்கின்றது.

புதிய அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பதவியேற்றுள்ளமையையடுத்து இலங்கை அமைச்சரவையின் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்திருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் இவ்வளவு பாரிய அமைச்சரவையைக் கொண்ட அரசாங்கம் ஒன்று அமைந்திருப்பது இதுதான் முதல் முறையாகும். அத்துடன் அதிகளவு கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைச்சரவையும் இதுதான்.

ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் பதினெட்டுப் பேரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆறு பேரும் அரசுடன் இணைந்துகொண்டுள்ளதையடுத்து 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தின் பலம் 114 ஆக உயர்வடைந்திருக்கின்றது.

52 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைக்கும் மேலதிகமாக மேலும் 33 பேர் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களாகவும், மேலும் 19 பேர் பிரதி அமைச்சர்களாகவும் மொத்தம் 104 உறுப்பினர்கள் தற்போதைய அமைச்சர் குழுவில் அடக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களை அரசில் இணைத்துக் கொள்வதற்கு கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி. எதிர்காலத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து அரசுக்கு எதிராக செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-3,5)




பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் மு.தனுர்ஷன்

ஊரிக்காடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முகுந்தன் மதுமினா தம்பதியரின் செல்வப் புதல்வன் மு.தனுர்ஷன் தனது 1 ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (29.01.2007) கொண்டாடுகின்றார்.

இவரை இவரது அப்பா ,அம்மா ,பாட்டி, அப்பப்பா ,அம்மம்மாமார் ,சித்தப்பா ,சித்திமார் ,அன்ரிமார் ,மாமா ,மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று வல்லை சிறி முத்துமாரியம்மன் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

(A.அ-622)

# பண்டாரிக்குளத்தில் தாக்குதல் ஒருவர் பலி,கான்ஸ்டபிள் காயம்

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் விவேகானந்தா வீதியில் படையினரை இலக்கு வைத்து நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவரும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன்; கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகிய இருவரும் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சென்னைக்கு விஜயம் செய்த இருவரும் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் தென் பகுதியின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக இந்திய மத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்கள் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சென்னையில் தமிழக அரசின் அதிகாரிகளை சந்தித்து விட்டு புதுடில்லிக்கு விஜயம் செய்யும் மேற்படி இரு எம்.பிக்களும் இந்திய வெளியுறவு அமைச்சின் அழைப்பை ஏற்றே அங்கு சென்றுள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# ஒப்பந்தம் காலாவதியானமைக்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறவேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாதுகாத்து அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை.

அதனால்தான் இரண்டு வருட ஒப்பந்தம் 97 நாட்களில் காலாவதியாகியது. ஒப்பந்தம் காலாவதியானமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முழுப்பொறுப்பும் கூறவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது, ஐக்கிய தேசியக்கட்சியின் சின்னமான யானைச் சின்னத்தின் மூலமாக போட்டியிட்ட பலரை ஜனாதிபதி அரசாங்கத்துடன் இணைந்துக் கொண்டு அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளார். இந்த நடவடிக்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சரத்துகளுக்கு முரணானது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய விடயங்களை ஜனாதிபதி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு அதனை மீறியுள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சி ஒன்று பூரண ஒத்துழைப்பு வழங்கியது வரலாற்றில் மறக்கமுடியாது என்றும் வரலாற்று ஒப்பந்தம் என்றும் தெரிவித்தனர். அந்த ஒப்பந்தத்தை ஜனாதிபதியே மீறிவிட்டார் என்றார். (ச)

## நேபாளத்திலிருந்து...

கடந்த 25 ஆம் திகதி நேபாளத்திற்கான விஜயத்தினை ரணில்விக்கிரமசிங்க மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது நேபாளப் பிரதமரை சந்தித்து உரையாடியதாக கூறப்பட்டுள்ளது.

நேபாளம் மற்றும் இலங்கை சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேபாள சபாநாயகரையும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடியதாக கூறப்பட்டுள்ளது. (ச-3)

## ஜனாதிபதி...

உயர் மட்டக் குழுவினர் சீனாவில் 5 நாட்கள் தங்கியிருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் சீன விஜயத்தின் போது இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. (ச)

## கல்கிசையில் 18 பேர்...

தங்கி இருப்பதற்கான காரணமும் மற்றும் ஏனைய ஆவணங்களையும் காண்பிக்க தவறியமையே கைதுக்கான காரணம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் பெண்களாவர். (ச)

## முஸ்லிம் மக்களுக்கு...

தெரிவித்தன. கல்முனை பொத்துவில் மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இம் மாவட்டம் அமையவுள்ளதாக தெரி விக்கப்பட்டது.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசுடன் செய்த ஒப்பந்தம்...

இருந்து இறக்க சகல வழிகளிலும் செயற்படுவோம் என அவர் மேலும் கூறினார்.

தலைமைத்துவப் பிரச்சினையினால் எவரும் விலகவில்லை. மாறாக அமைச்சரவைப் பதவிகளையும் சுகபோகங்களுக்காகவுமே அவர்கள் அரசுடன் இணைந்துள்ளார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைத்துவம் மிகவும் பலமானதாக இருந்தகாலத்திலும் இவ்வாறு உறுப்பினர்கள் விலகிச் சென்றிருக்கின்றார்கள்.

ஆனால் கட்சியும் அதன் வாக்கு வங்கி யும் வளர்ந்து கொண்டே செல்கின்றது தவிர உடையவில்லை என அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூட எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க 48 இலட்சத் திற்கும் அதிகமான வாக்குகளை தனித்து நின்று வென்றிருக்கின்றார். கட்சிதாவிய உறுப்பினர்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க இருக்கிறது என சேன நாயக்க மேலும் தெரிவித்தார். (ச-3)

## கட்சி...

வின் ஆட்சேர்ப்பு நடவடிக் கையால் முறிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மிகவும் அடிப்படையானது என சர்வதேசத்தால் கருதப்பட்ட ஒப்பந்தம் முறிவடையும் நிலையை மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியுள்ளமை சர்வதேச ரீதியில் மிகப்பெரிய ராஜதந்திர நெருக்கடியை மகிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுகின்றபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மத்தியில் அது அதிருப்தியை ஏற்படுத்தும் என்றும் இதன் காரணமாக அரசாங்கத்தினை சுமூகமாக நடத்திச் செல்ல முடியாத நிலை மகிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில் அரசாங்கத்தை நடத்துவது மகிந்த ராஜபக்ஷவிற்கு இயலாத காரியம் என்றும் தனது தவறுகளுக்காக அவர் வருந்தும் காலம் விரைவில் ஏற்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகவே கட்சித் தாவல் குறித்து அக்கறை கொள்ளாமல் அவர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.